## சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

**HMOP NO. 281/2022 (மசா1) தேதி: 28.06.2024**

**மசா1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது மனுவில் எதிர்மனுதாரர் என்னிடம் ஆலோசனை செய்யாமல் எங்கள் குழந்தைக்கு பெயர் வைத்துவிட்டதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது மற்றும் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் அருணாசலம் ஜோதிடரிடம் என்ன பெயர் வைப்பது என ஆலோசனை பெறப்பட்டு என்னிடமும் கலந்துரையாடி அதன்பின்னர் தான் எங்கள் குழந்தைக்கு பெயர் வைக்கப்பட்டது என்றாலும், நான் வழக்கிற்காக அதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு குழந்தை பிறந்த சமயத்தில் நான் ராஜபாளையத்தில் காவல் துறையில் பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். 20.3.2017 தேதியில் எதிர்மனுதாரர் கைக்குழந்தையுடன் அவர்களது பெற்றோர்களுடன் நான் பணிபுரிந்த ராஜபாளையம் காவல் நிலையத்தில் வந்து என்னுடன் சேர்ந்து வாழ மனு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்புவதாக கூறியும் சமரசம் பேசி அதே சமயம் எதிர்மனுதாரருக்கு TET தேர்வு இருந்ததால் அந்த தேர்வு முடிந்த பின்னர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வது என பேசி முடிக்கப்பட்டது என்றால் சரிதான். TET தேர்வு முடிந்த பின்னர் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ அழைத்த போது நான் சேர்ந்து வாழ மறுத்துவிட்டதால் எதிர்மனுதாரர் மீண்டும் அதே காவல் நிலையத்தில் என்மீது புகார் மனு கொடுத்தார் என்றால் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ மறுத்துவிட்டார் ஆனால் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தது உண்மை. அந்த சமயத்தில் காவல் நிலையத்தில் பணிபுரிந்து மணி, செல்லப்பாண்டி என்ற காவலர்கள் எனக்கு நிறைய அறிவுரைகள் கூறி சேர்ந்து வாழ வற்புறுத்தினார்கள் என்றால் எங்கள் இருவரையும் அழைத்து அந்த காவலர்கள் அறிவுரை வழங்கினார்கள். அந்த சமயத்தில் எனது தந்தை, எனது தாய்மாமா , எனது அண்ணி, ஆகியோர் கூறிய அறிவுரையின் பேரில் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. 12.05.2017 தேதியில் எதிர்மனுதாரர் எங்கள் குழந்தையுடன் அவரது தாயாரை அழைத்துக்கொண்டு நான் வசித்து வரும் காவலர் குடியிருப்பு வீட்டிற்கு வந்தார்

என்றால் சரிதான். அதன்படி எதிர்மனுதாரர் குழந்தையுடன் எனது காவலர் குடியிருப்பில் குடும்பமாக என்னுடன் வசித்து வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு நான்கு மாதங்கள் மட்டுமே குடும்பமாக வாழ்ந்தோம். அந்த சமயத்தில் நான் எதிர்மனுதாரருக்கு எந்த தொகையும் கொடுக்காத நிலையிலும் அவர் அவரது பெற்றோர்களிடம் இருந்து பணம் வாங்கி அந்த தொகையை வைத்து என்னுடன் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. நான் செலவு செய்தேன். எதிர்மனுதாரர் தான் அவரது தம்பிக்கு திருமணம் ஆகிவிட்டால் அவரது பெற்றோர்கள் எதுவும் கொடுக்கமாட்டார்கள் என்று கூறி அவரது பெற்றோர்களிடம் இருந்து பணம் வாங்கி வந்தார். அந்த சமயத்தில் நான் எனக்கு இருசக்கர வாகனம் வாங்கி தரவேண்டும் என கூறி எதிர்மனுதாரரை தலைமுடியை பிடித்து இழுத்து அவரை அடித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் நான் கேட்காமலே அவரது பெற்றோர்களிடம் இருந்து பழைய இருசக்கர வாகனத்தை வாங்கி வந்தார். நான் பொய் சொல்கிறேன் என்றாலும் எதிர்மனுதாரரின் தம்பி எனக்கு புதிய இருசக்கர வாகனம் தான் வாங்கி கொடுத்தார் என்றாலும் சரியல்ல. அந்த இருசக்கர வாகனத்திற்கு தினமும் பெட்ரோல் போடுவதற்கு எதிர்மனுதாரர் தான் அவர்களின் பெற்றோர்களிடம் இருந்து பணம் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>** : எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D.மாரிக்காளை.,B.Sc.,M.L.,<br>சார்பு நீதிபதி,<br>கோவில்பட்டி.